இந்து தமிழ்
THE HINDU

# வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் மூங்கில் கைவினைப் பொருட்கள் கண்காட்சி

**கோவை:** கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் (ஐஎஃப்ஜிடிபி) செயல்பட்டுவரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் (என்விஸ்) மூங்கில் பொருட்கள் மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்துதல் பசுமைத் திறன் மேம்பாட்டு பயிற்சி வரும் மார்ச் 18-ம் தேதி வரை அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 15 பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். முதல் வாரத்தில் பயிற்சியாளர்கள் செய்த கைவினைப் பொருட்களின் கண்காட்சி நடைபெற்றது. ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி.குன்னிகண்ணன் கண்காட்சியை தொடங்கிவைத்து பார்வையிட்டார். 'மூங்கில் நீரூற்றுகள்' என்ற கருப் பொருளில் பயிற்சி பெற்றவர்களின் படைப்பாற்றல் மற்றும் திறமைகளை வெளிப்படுத்தும் பல்வேறு கைவினைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த கண்காட்சியை ஐஎஃப்ஜிடிபி விஞ்ஞானிகள், பணியாளர்கள், களப் பணியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், வனத்துறை அதிகாரிகள் பார்வையிட்டு, பயிற்சியாளர்களின் படைப்பாற்றலைப் பாராட்டினர்.



▲ கோவையில் உள்ள வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற மூங்கில் கைவினைப்பொருட்கள் கண்காட்சியை பார்வையிட்ட ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி.குன்னிகண்ணன் உள்ளிட்டோர்.

11. News in The Hindu Tamil, Coimbatore, 09.02.2022, Bamboo Crafts Exhibition by IFGTB ENVIS.